# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.131 /பேரூ/2023
நாள்.02.08.2023

திரு .E.B. முருகேசன்,
திருவள்ளூர் மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பொதட்டூர்பேட்டை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம் .... எதிர்மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை, எண் 5 பூபதிராஜன் வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு.E.B. முருகேசன் என்பவரது 16.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.05.2023 அன்று பெறப்பட்டு, 131/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை, எண் 5 பூபதிராஜன் வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு.E.B. முருகேசன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளேன். எனக்கு 23.11.2022 அன்று பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

நான் 24.11.2022 அன்று பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்க கோரி மனு செய்தேன். நான் கோரிய ஒப்பந்தப்புள்ளிக்கு ஷெட்யூல் பணம் பெற்றுக்கொண்டு, ஷெட்யூல் ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்க பலமுறை என்னை அலைக்கழிக்க வைத்து பொதட்டூர்பேட்டை பேரூராட்சி ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு பொது நிபந்தனைகளுக்கு மாறாக காலம், நேரம் கடந்து 29.11.2022 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணிக்கு இரண்டு பணிகளுக்கு ரூ. 3,150 + ரூ.3,150ஆக

மொத்தம் ரூ. 6,300/– மட்டும் பெற்றுக் கொண்டு, ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கவில்லை என்பதை தங்களின் கவனத்தில் பதிவு செய்கின்றேன். என்னுடைய ஷெட்யூல் பணத்தை பொதட்டூர்பேட்டை பேரூராட்சி தலைமை உதவியாளர் (A1) அவர்கள் ஷெட்யூல் ரூபாய் 6300/– பெற்றுக் கொண்டு, பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் இல்லை என்பதால் அவர் வந்த பிறகு கையொப்பம் பெற்று, அதன் பிறகு தான் ஷெட்யூல் படிவம் மற்றும் பணம் செலுத்திய இரசீது வழங்கப்படும் என கூறி என்னை அனுப்பி வைத்தார்கள். 30.11.2022 அன்றும் நான் கோரிய ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் பணம் செலுத்திய (M.O.) இரசீதும் வழங்கவில்லை. அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பொதட்டூர்பேட்டை செயல் அலுவலர் அவர்கள் பேரூராட்சி அலுவலகத்திற்கு வரவில்லை. அது வரைக்கும் நான் காத்திருந்து உதவியாளரை (A1)நேரடியாக கேட்ட போது செயல் அலுவலர் 29.11.2022 மற்றும் 30.11.2022 இரண்டு நாட்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது, அதில் செயல் அலுவலர் கலந்து கொள்ள சென்று விட்டார். எனவே, அவர் வந்த பிறகு அவரிடத்தில் கையொப்பம் வாங்கிய பிறகு ஒப்பந்தப்படிவம் மற்றும் இரசீது வழங்க முடியும் என கூறி என்னை அனுப்பி வைத்தார்கள்.

01.12.2022 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களை நேரில் சந்தித்து கங்கையம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க (கிழக்குபகுதி) இருபக்கம் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.8,80,000/– இதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் தொகை விற்பனை வரி உட்பட ரூபாய் 3150/– மற்றும் வள்ளலார் நகர் மழைநீர் வடிகால் மற்றும் சுவர்சிலாப் அமைக்க மொத்த மதிப்பீடு ரூ.6,30,000/– இதற்கான ஒப்பந்தபுள்ளி படிவத்தொகை விற்பனை வரி உட்பட ரூ.3150/– ஆக இரண்டு ஷெட்யூல் தொகை 29.11.2023 அன்று செலுத்தி விட்டேன். இதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் பணம் செலுத்திய இரசீதும் வழங்கவில்லை. எனவே தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என கோரியதற்கு 1.12.2022 அன்று பகல் 2.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் பணம் செலுத்திய M.O.இரசீதும் முன் தேதியிட்டு (29.11.2022) எனக்கு வழங்கப்பட்டது. நான் பெற்றுக் கொண்டு ஒப்பந்தப்புள்ளி படிவம் இரண்டுக்கும் டேவணித்தொகை பெற்றுக் கொண்டு, M.O.இரசீது வழங்குமாறு கோரினேன். அதற்கு பொதட்டூர்பேட்டை செயல் அலுவலர் அவர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவது வேறு தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்று அந்த தேதியை பேரூராட்சி மன்ற தலைவரை கலந்தாலோசித்து, பின்பு அறிவிக்கப்படும் எனக்கூறி என்னை அனுப்பி வைத்தார்.

வணக்கத்திற்குரிய ஐயா, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி 30.11.2022 அன்று நிறுத்தப்பட்டு மறுதேதிக்கு தள்ளி வைத்ததற்கான எந்த அறிவிப்பும் அறிவிக்காமல் அறிவிப்பு பலகையிலும் ஒட்டாமல் 1.12.2022 நான் கேட்டபின்பு செயல் அலுவலர் கூறுவது தவறானது. இதில் ஏதோ உள்நோக்கம் இருப்பது என்று நான் கருதுகின்றேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் கடந்த 2021–2022ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூ. 3,58,98,000/– அளவில் ஒப்பந்தப்பணி நடைபெற்றுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் அரசுக்கு நட்டம் ஏற்படும் விதத்தில் ஒப்பந்தப்புள்ளி பொது நிபந்தனைகளுக்கு முரணாக டெண்டர் விடப்பட்டுள்ளது என குற்றம் சாட்டுகின்றேன். மேலும் முறைப்படி டெண்டர்பெட்டி வைத்து வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி உள்ளடக்கி அரக்கு சீல் முத்திரையிடப்பட்ட உறையின் மேல் வேலையின் பெயர் எழுதி முறையாக செயல் அலுவலர்,

பொதட்டூர்பேட்டை பேரூராட்சி என எழுதி டெண்டர் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறப்படவில்லை என்பதை தங்களின் கவனத்திற்கு பதிவு செய்கின்றேன். இதனால் அரசுக்கு பல இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுத்திய அலுவலர் மீது சட்டபடி நடவடிக்கை தேவை.

எனவே மேற்கண்ட டெண்டர் ஒப்பந்தப்புள்ளி படிவம் மீது உரிய உயர்மட்ட விசாரணை கமிஷன் அமைத்து முறையான விசாரணை நடத்தி தவறு செய்த அலுவலர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) இம்முறைமன்ற 23.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.05.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் 25.5.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கால அவகாசம் கோரினார்.

4) மனுதாரர் 25.5.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. பின்னர் இம்முறைமன்ற 27.5.2023 நாளிட்ட அறிவிப்பில் 13.6.2023 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்துக் கொள்ளக் கோரி மனுதாரருக்கும் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கும் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5) 13.6.2023 அன்று நடைபெற்ற விசாரணையிலும் மனுதாரர் ஆஜராகவில்லை. பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் 13.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

1. மனுதாரர் 24.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கக் கோரி மனு செய்தார்.
2. மனுதாரர் கோரிய இரண்டு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை மொத்தம் ரூபாய் 6300/– (பணி ஒன்றிற்கு தலா ரூ.3,150/– வீதம் இரண்டு பணிகளுக்கு) மனுதாரரால் தொகை செலுத்தியதற்கான ரசீதும், அதற்கான ஒப்பந்த படிவங்கள் இரண்டும் குறித்த நேரத்தில் மனுதாரருக்கு வழங்கப்பட்டது.
3. மனுதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகைக்கு உரிய ரசீது மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவம் முறையாக மனுதாரருக்கு 29.11.2022 அன்றே வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் எங்கள் மீது காழ்ப்புணர்ச்சி காரணமாக உண்மைக்கு முரணாக புகார் தெரிவித்துள்ளார்.
4. மேலும் மனுதாரரிடம் தொகை பெறப்பட்டவுடன் பல்வகை ரசீது (M.R.Receipt) மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவம் உடன் வழங்கப்பட்டது.
5. மனுதாரர் தெரிவித்துள்ளதுபோல் முன்தேதியிட்டு எந்த ஒப்பந்தப்புள்ளி படிவமும், ரசீதுகளும் வழங்கப்படவில்லை. அவை குறித்த நேரத்திலும், குறித்த தேதியிலும் வழங்கப்பட்டது.

6. நிர்வாகத்தின் காரணமாக ஒப்பந்தப்புள்ளிகள் ஒத்திவைக்கப்படும் பட்சத்தில் உரிய அறிவிப்பு, அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டு விளம்பரம் செய்யப்படுகிறது மற்றும் அலுவலகத்தில் வரும் நபர்களுக்கு நேரிடையாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், 2020–2021–ம் ஆண்டு நடைபெற்ற 9 ஒப்பந்தப்புள்ளிகளும் முறையாக விளம்பரம் செய்யப்பட்டு வழிமுறைகளின்படியே ஒப்பந்தம் (Tender) நடைபெற்றது.

7. மனுதாரர் கோரிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை மட்டுமே செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற்றுள்ளார். பணிகளுக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகையில் (Deposit Amount) ஏதும் செலுத்தவில்லை. மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவம் பூர்த்தி செய்து ஒப்பந்தப் பெட்டியில் போடவில்லை.

6) இம்முறைமன்ற நடுவ 19.6.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் 5.7.2023 அன்று நடைபெறும் விசாரணையில் ஆஜராக மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 05.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரரான எனக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கிடைக்கப்பெற்றது. 9 பணிகளில் 2 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கக்கோரி பேரூராட்சியில் கோரியிருந்தேன். மேலும் ஷெட்யூல் பணம் என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்க பேரூராட்சியில் பலமுறை கோரியிருந்தேன். பேரூராட்சியில் பணியிலிருந்த தலைமை உதவியாளர் ( A1) படிவத்திற்கான பணம் ரூபாய் 6,300/– ( பணி ஒன்றிற்கு ரூ 3,150/– வீதம்) 29.11.2022 அன்று என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு " செயல் அலுவலர் இல்லை. அவர் வந்தபின்னர் படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான ரசீது வழங்கப்படும்" என தெரிவித்திருந்தார். மறுநாள் 30.11.2022 அன்றும் பேரூராட்சி அலுவலகத்தில் சென்று மேற்கண்ட படிவத்தை கோரியிருந்தேன். ஆனால் செயல் அலுவலர் மாவட்ட ஆட்சியர் கூட்டத்திற்கு சென்றுள்ளதாக தெரிவித்து என்னை காத்திருக்க வைத்துவிட்டு பின்னர் என்னை திருப்பி அனுப்பி விட்டனர்.

மறுநாள் 1.12.2022 அன்று காலை செயல் அலுவலரை நேரில் சந்தித்து பொதட்டூர்பேட்டை பேரூராட்சி கங்கையம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால்காய் அமைக்கும் பணிக்கும் (மதிப்பீடு 8.8 இலட்சம்) மற்றும் வள்ளலார் நகர் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சுவர் சிலாப் அமைக்கும் பணிக்கும் ( மதிப்பீடு ரூ 6.30 இலட்சம்) ஷெட்யூல் தொகை ரூ 6,300/– நான் செலுத்திவிட்டேன் என தெரிவித்து ஒப்பந்தப் படிவத்தை கோரியிருந்தேன். நான் கோரியிருந்த இரசீது மற்றும் படிவம் ஆகியவை முன்தேதியிட்டு அதாவது 29.11.2022 நாளிட்டு எனக்கு அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறும் தேதி வேறு தேதிக்கு மாற்றப்பட்டது என தெரிவித்து என்னை அனுப்பிவிட்டனர். ஆனால், ஒப்பந்ததாரர்களில் ஒருவரான எனக்குத் தெரியாமல் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி 1.12.2022 அன்று திறக்கப்பட்டு, அன்றைய தினமே ஒப்பந்ததாரர்களை முடிவுசெய்து, அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்கு முரணாக மேற்கண்ட 2 பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது குறித்து பேரூராட்சியில் விவரம் கோரியபோது ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை மட்டுமே நான் செலுத்தியுள்ளதாகவும், வைப்புத் தொகை (Deposit Amount) ஏதும் என்னால் செலுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இது முழுக்க முழுக்க தவறாகும். எனவே, மேற்கண்ட தவறுகளுக்குக் காரணமான பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 15.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையைச் சார்ந்த மனுதாரர் திரு. E.B. முருகேசன் என்பவர் தனது 16.05.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பொதட்டூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட கங்கையம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் வள்ளலார் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சுவர்சிலாப் அமைத்தல் ஆகிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கு விண்ணப்பப் படிவம் வழங்கப்படவில்லை என புகாராக தெரிவித்துள்ளார்.

பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் 2021–22ஆம் ஆண்டில் 15வது நிதிக்குழு (untied Grant) முதல் தவணை மானியம் நிதியின்கீழ் பிறபணிகளுள் ரூ. 8.80 இலட்சம் மதிப்பீட்டில் கங்கையம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் இருபுறமும் அமைக்கவும் மற்றும் பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் 2022–23ம் ஆண்டின் பொது நிதியின்கீழ் பிறபணிகளுள் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி வள்ளலார் நகரில் ரூ. 6.30 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் மற்றும் சுவர்சிலாப் அமைக்கவும், 21.11.2022 நாளிட்ட இரு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, 30.11.2022 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரரான மனுதாரர் மேற்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ளும் வகையில் பேரூராட்சியில் 29.11.2022 அன்று உரிய விண்ணப்பம் கட்டணம் செலுத்தியும் பேரூராட்சி செயல் அலுவலர் 29.11.2022 மற்றும் 30.11.2022 ஆகிய 2 நாட்கள் பணிநிமித்தம் காரணமாக பேரூராட்சி அலுவலகத்தில் இல்லாததால், இறுதியாக 01.12.2022 அன்று விண்ணப்பப் படிவத்தை முன்தேதியிட்டு அதாவது 29.11.2022 அன்று வழங்கியுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில், 29.11.2022 அன்று மனுதாரருக்கு விண்ணப்பப்படிவம் அளித்தற்கு சாட்சியாக பேரூராட்சி பணியாளர்கள் விண்ணப்பப் படிவத்தை

மனுதாரரின் மின்னஞ்சல் முகவரியில் அனுப்பி இருக்கலாம் அல்லது 29.11.2022 அன்று வழங்கப்பட்டதற்கு ஆதாரமாக மனுதாரரின் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது Speed Post மூலமாகவோ அனுப்பி இருக்கலாம். அவ்வாறு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் டேவணித் தொகையினை செலுத்துவதாக மனுதாரர் தெரிவித்தும், ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறும் தேதி மாற்றப்பட்டுள்ளதாக மனுதாரரிடம் தெரிவித்து, 30.11.2022 அன்று ஒப்புந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவிடாமல் செய்துள்ளதாக மனுதாரரின் மனுவின் மூலம் ஐயப்பாடு எழுகின்றது.

இந்நிலையில் பேரூராட்சியில் மேற்காணும் மனுதாரால் புகார் தெரிவிக்கப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளின் தொடர்பான முழு ஆவணங்களையும் தணிக்கை செய்தால் மட்டுமே உண்மைநிலை தெரியவரும் என இம்முறைமன்றம் கருதுகிறது. மேலும் பேரூராட்சி செயல் அலுவலர் சம்பந்தப்பட்ட மனுதாருக்கு ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பம் மறுக்கப்பட வேண்டுமென்ற உள்நோக்கத்துடன் செயல்பட்டதாகவே கருத வாய்ப்புள்ளது.

எனவே பொதட்டூர்பேட்டை பேரூராட்சியின் 21.11.2022 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூலம் 2021–22ம் ஆண்டில் 15வது நிதிக்குழு (untied grant) முதல் தவணை மானியம் நிதியின்கீழ் பணிகளை மேற்கொள்ள கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் 21.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி மூலம் பேரூராட்சி பொது நிதியின்கீழ் பணிகளை மேற்கொள்ள கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆகியவை முறையாக கையாளப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக்குழு மூலம் தணிக்கை செய்து, அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறும்;

பணியின் நிமித்தமாக பேரூராட்சி செயல் அலுவலர் வெளியில் செல்ல வேண்டிய நிலைஏற்பட்டால் ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் பிறமுக்கிய பணிகளை அலுவலக இரண்டாம் நிலை அலுவலரிடம் ஒப்படைப்பு ஆணை வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏதேனும் முறைகேடுகளோ மற்றும் பேரூராட்சிக்கு நிதியிழப்போ நடைபெற்றுள்ளதாக தணிக்கை அறிக்கை மூலம் கண்டறியப்பட்டால், பேரூராட்சியில் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Director of Local Fund Audit is directed to get the Tender papers, scrutinized critically to ensure flawless compliance with the rules and regulations of Tender Act. The conduct of the Town Panchayat officials including the Executive Officers in not furnishing the Tender Schedules and formats to certain bidders is highly unsatisfactory by favouritism, evasion and dodging through absence, wanton avoidance and delay to prevent certain bidders from participating in the Tender. This happens when the Tender cost is split below Rs.10/- lakhs to circumvent online tender and

objective process. The Director of Town Panchayats is directed to plug the loopholes in the system and ensure fool proof conduct of Tender

2023– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் – 02 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு .E.B. முருகேசன்,
எண். 5, பூபதிராஜன் வீதி,
பொதட்டூர்பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம்

2) செயல் அலுவலர்,
பொதட்டூர்பேட்டை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை – 28.

4) இயக்குநர்,
தமிழ்நாடு உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
நந்தனம், சென்னை –600 035.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
7/8/23